**SJK(T) LADANG EDENSOR,**

**28400 MENTAKAB, PAHANG DARUL MAKMUR**

---

| | |
|---|---|
| பெயர் : | கிழமை : |
| ஆண்டு : | திகதி : |

**அ) வாசித்து அறிக**

தாவரவியல் அறிவியலில் ஒரு முக்கியக் கூறாக விளங்குவது தாவரவியல். தாவரவியல் தாவரங்களை ஆய்ந்தறிந்து பல ஆழ்ந்த தெளிவுகளை நமக்குத் தருகிறது. மற்ற உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு அடிப்படையே" தாவரங்கள் என்பதைத் தாவரவியல் மெய்ப்பிக்கிறது.

தாவரவியலில் கூறப்பட்டுள்ள சில உட்கூறுகளைக் காண்போம். தாவரங்களைப் பூக்கும் தாவரம், பூக்காத தாவரம் எனப் பகுத்திடலாம். பெரும்பாலான பூக்கும் தாவரங்கள் விதைகள் உள்ள காய்கனிகளைக் கொண்டிருக்கும். விதைகளைக் கொண்டு இந்த வகைத் தாவரங்கள் இனவிருத்தி செய்கின்றன. தென்னை, கொய்யா, செம்பனை, மிளகாய், கத்திரிக்காய் ஆகியவற்றை இதற்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

பூக்காத தாவரங்கள் வேறு வகையில் இனவிருத்தி செய்கின்றன. நிலத்தடித்தண்டு இனவிருத்தி, இலைவேர் இனவிருத்தி, சிதல்விதை இனவிருத்தி, வெட்டுத்துண்டு இனவிருத்தி, ஊற்றுக்கன்று இனவிருத்தி என்பன அவற்றுள் சில. உருளைக்கிழங்கு, பூண்டு, இரணக்கள்ளி, மருவிளம்பட்டை, பெரணி போன்றவற்றை இவ்வகை இனவிருத்தியின் உதாரணங்களாகக் கொள்ளலாம். ரோஜா, மல்லிகை, வாழை ஆகியவை பூத்தாலும் வெட்டுத்துண்டு இனவிருத்தி மூலமாகவும் ஊற்றுக்கன்று இனவிருத்தி மூலமாகவும் நீடுநிலவலை உறுதி செய்கின்றன.

LIVEWORKSHEETS

**ஆ) உரைநடைப் பகுதியை வாசித்துச் சரியான கூற்றிற்கு (/) என்றும் பிழையான கூற்றிற்கு (x) என்றும் பதிலளிப்பர்.** (5 புள்ளிகள்)

| | | |
|---|---|---|
| 1. | நிலத்தடித்தண்டு இனவிருத்தி மற்றும் இலைவேர் இனவிருத்தி பூக்கும் தாவரங்களின் இனவிருத்தி வகைகளாகும். | |
| 2. | தாவரங்களை ஆய்ந்தறிந்து பல ஆழ்ந்த தெளிவுகளைக் கொடுக்கும் அறிவியல் விலங்கியல் ஆகும். | |
| 3. | தென்னை, மிளகாய், கொய்யா ஆகியவை பூக்கும் தாவரங்கள் என்று அழைக்கப்படுகிறது. | |
| 4. | வாழை, ரோஜா மற்றும் மல்லிகை ஆகிய தாவரங்கள் இரண்டு வகையில் இனவிருத்தி செய்கின்றன. | |
| 5. | விதைகள் பூக்கும் தாவரங்கள் இனவிருத்தி செய்ய முக்கியமான ஒன்றாகும். | |

LIVEWORKSHEETS

## இ) கருத்துணர் கேள்விகளுக்கு விடையளித்திடுக. ( 8 புள்ளிகள்)

1. தாவரங்களில் எத்தனை உட்பிரிவுகள் உள்ளன? அவற்றை எவ்வாறு வகைப்படுத்தலாம்?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

2. பூக்கும் தாவரங்களின் அடிப்படைத் தன்மை எது?

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

3. பூக்காத தாவரங்களின் இனவிருத்தி முறைகளை வகைப்படுத்துக

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

4. பூக்கும் தாவரங்கள், பூக்காத தாவரங்களின் உதாரணங்களைப் பின்வரும் கட்டங்களில் எழுதுக.

| | பூக்கும் தாவரம் | பூக்காத தாவரம் |
|---|---|---|
| I | | |
| II | | |
| III | | |
| IV | | |
| V | | |

LIVEWORKSHEETS